**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.102/2024**
**வழக்கு சாட்சி P.W.7**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜவேல் | தொழில் | : மளிகை கடை |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 52 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 09.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

எனது பெயர் ராஜவேல் ஆகும். எனது தகப்பனார் பெயர் பழனிச்சாமி ஆகும். நான் ஒட்டன்சத்திரம் தாராபுரம் ரோட்டில் மளிகை கடை வைத்துள்ளேன். எனது மளிகை கடையின் பெயர் சத்திவேல் மளிகை கடை ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்த போது நான் சரியாக தான் எனது பெயரை சொன்னேன். சக்திவேல் மளிகை கடை என்று நான் சொன்னதை சக்திவேல் என்று குறித்துக்கொண்டார். அதனால் சக்திவேல் என்று எனது பெயரை தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்த போதும் நான் இதை தான் சொன்னேன். வேறு எதுவும் தெரியாது.

(காவல் ஆய்வாளர் தாக்கல் செய்துள்ள கு.வி.மு.ச.161(3)ன் கீழ் கண்டுள்ள வாக்குமூலத்தின் மாறாக சாட்சி பதில் அளித்ததால் சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நான் மேலே சொல்லியுள்ள விலாசத்தில் மளிகை கடை வைத்துள்ளேன் என்றால் ? சரிதான். எனது மளிகை கடையில் வெல்லம், பேரிச்சம்பழம் விற்பனைக்காக வைத்துள்ளேன் என்றால் ? சரிதான். ஆஜர் எதிரியை எனக்கு

தெரியாது. கடந்த 10.11.2016ம் தேதி அம்பிளிக்கை காப்பிலியப்பட்டியை சேர்ந்த பழனிச்சாமி மகன் தியாகராஜன் என்பவர் கள்ளச்சாராயம் தயாரிப்பதற்கு தேவையான மண்டைவெல்லம், பேரிச்சம்பழம் ஆகியவற்றை எனது கடையில் வாங்கியதாகவும், போலீசார் விசாரித்த போது நான் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக வேண்டி ஆஜர் எதிரியை தெரியாது என்றும், ஆஜர் எதிரி எனது கடையில் வாங்கவில்லை என்றும், வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல. போலீசார் விசாரித்த போதும் நான் அதை தான் சொன்னேன்.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.09 19:06:46 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்